பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு


சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 21 வெள்ளிக்கிழமை 09.12.2022 கதிர் 286

## தீவிர புயலாக இருந்த 'மாண்டஸ்' இன்று பகல் வலுவிழந்த புயலானது

(விரிவான செய்தி 5 ஆம் பக்கத்தில்)

# யாழ். குடாநாட்டில் வீதிகளில் சாய்ந்தன மரங்கள் போக்குவரத்துப் பாதிப்பு; மின்சாரமும் துண்டிப்பு







(ந.லோகதயாளன்)

'மாண்டஸ்' புயலின் தாக்கம் வடக்கு, கிழக்கில் அதிக பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. யாழ்ப்பாணம் மாவட் டத் தில் வீசிய அதிக காற்றின் காரணமாக பாரிய மரங்கள் பல சாய்ந்து வீழ்ந்துள்ளதோடு சில வீடுகளும் சேதமடைந்துள்ளன. 2

# வடக்கில் புயலின் கோரத்தாண்டவத்தால் 254 வீடுகள் சேதம்; 151 கால்நடைகள் சாவு

## பயன்தரு மரங்கள் பல முறிந்து வீழ்ந்து அழிவு







(ந. லோகதயாளன்)

'மாண்டஸ்' புயலின் தாக்கத்தால் வடக்கு மாகாணத்தில் மாத்திரம் நேற்று ஒரே நாளில் 254 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் 151 கால் நடைகளும் உயிரிழந்துள்ளன என்று மாவட்ட செயலாளர்கள் தெரிவித் துள்ளனர். 2

# நடுநிலையும் ஆதரவும் ஒன்றா? மனோவுக்கு வேலுகுமார் பதிலடி





'நடுநிலை'யும் 'ஆதரவு'ம் ஒன்றா என்பது ஆறாம் அறிவு உள்ளவர்க ளுக்கு நிச்சயம் தெரியும் – புரியும்.

–இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார் தெரிவித்துள்ளார். 2023 ஆம் நிதி யாண்டுக்கான வரவு – செலவுத் தி ட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின் போது தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நாடா ளுமன்ற உறுப்பினர் எம். வேலுகும ார் நடுநிலை வகித்திருந்தார். இதையடுத்து அவர் உடனடியாகத் தமிழ் முற்போக்குக் கூட்டணியி லிருந்து இடை நிறுத்தம் செய்யப்ப டுகின்றார் என்று கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. அறிவித்திருந்தார்.

மனோவின் இந்த அறிவிப்புக்குப் 2

# பிரிகேடியர் தீபனின் தந்தை காலமானார்!




தமிழீழ விடுதலைப்புலிகளின் வட போர்முனைக் கட்டளைத் தளபதியாக இருந்த மாவீரர் பிரிகேடியர் தீபன் மற்றும் தி ருகோணமலை மாவட்ட சிறப்புத் தளபதியாக இருந்த மாவீரர் லெப். கேணல் கில்மன் ஆகியோரின் தந்தை கந்தையா வேலாயுதபிள்ளை காலமானார். 2

## ஐ.தே.க. அல்லது இ.தொ.காவுடன் சங்கமிக்கப் போகின்றாரா குமார்?

ஜனநாயக மக்கள் முன் னணியின் பிரதித் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணி யின் கண்டி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான எம். வேலுகுமார் ஐக்கிய தேசியக் கட்சி அல்லது இலங்கைத் தொழிலாளர் 2

## அநாவசியமாக வெளியில் நடமாடுவதைத் தவிருங்கள்

### மக்களிடம் வேண்டுகோள்



பொதுமக்கள் அநாவசியமாக வெளியில் நடமாடு வதைத் 8

### மின் கட்டண உயர்வால் அரசுடன் முட்டி மோதிய

## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு ஆப்பு

மின்சார சபையை மறுசீர மைப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் முன்மொழிவுகளுக்கு அமைய, பொதுப் பயன் 2

## பிரிகேடியர் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்., தென்மராட்சி, கொடிகாமம் – வரணிப் பிரதேசத்தைச் சொந்த இடமாகக் கொண்ட அவர், சுகயீனம் காரணமாக இன்று காலமானார்.

6 பிள்ளைகளின் தந்தையான அவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் அந்திம நிகழ்வுகள் குறித்து பின்னர் அறியத்தரப்படும் என்றுகுடும்பத்தினர்தெரிவித்துள்ளனர்.

## வடக்கு, கிழக்கை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றிரவு யாழ். குடாநாட்டிலும் அதிக மழையுடன் கடும் குளிர் நிலவிய அதே நேரம் அதிக காற்றும் வீசியது.

இதன் காரணமாகப் பல இடங்களில் வீடுகளிலும், வீதிகளிலும் பெருமளவு மரங்கள் அடியோடு சாய்ந்து வீழ்ந்தன. இதனால் பல மணிநேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டதுடன் போக்குவரத்துக்களும் பாதிக்கப்பட்டன.

ஊர்காவற்றுறை மற்றும் காரை நகரில் இரு பனை மரங்கள் வீடுகளின் மீது வீழ்ந்தமையால் இரு வீடுகளும் சேதமடைந்தன.

இதேபோன்று மருதங்கேணி – வத்திராயனில் ஒரு பனை முறிந்து வீதியில் வீழ்ந்தமையால் சில வீடுகளுக்கான மின்சாரம் முற்றாகத் தடைப்பட்டது.

இதேநேரம் யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட இடங்களில் பெரிய மரங்கள் அடியோடு சாய்ந்து வீதியில் வீழ்ந்தன.

வீதியில் வீழ்ந்த மரங்கள் யாழ்ப்பாணம் மாநகர சபையின் பணியாளர்களால் இன்று பகல் அகற்றப்பட்டன.

இதேவேளை, கரவெட்டி, மருதங்கேணி, பருத்தித்துறை பிரதேசங்களிலும் சேதங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சீரற்ற காலநிலையால் யாழ்ப்பாணத்திலிருந்து தீவகங்களுக்கான படகு சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது.

## நடுநிலையும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிலடி வழங்கும் வகையில் வேலுகுமார் எம்.பி. தனது முகநூலில் பதிவொன்றை இட்டுள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

'நடுநிலை'யும் 'ஆதரவு'ம் ஒன்றா என்பதுஆறாம்அறிவுஉள்ளவர்களுக்கு நிச்சயம் தெரியும் – புரியும். ஆக தனக்கு வந்தால் ரத்தம், மற்றையவர்களுக்கு வந்தால் தக்காளி சட்டி எனக் கூறித் திரிபவர்களுக்கு அது புரியாது.'ஜெனிவா' தொடரில் இலங்கைக்கு எதிராக பிரேரணை வரும் போது, 'நடுநிலை' வகிக்கும் நாடுகள்கூட 'எதிர்' போக்கையே கடைபிடிக்கின்றன என்று அரசியல் பாடம் எடுப்பவர்களுக்கு, தற்போது 'நடுநிலை' என்பது மாறி விளங்குவது ஏன்? இது அரசியலில் எந்த டிசைனைச் சாரும்?

தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள்தான் உள்ளன என்ற நிலைப்பாட்டில் இருப்பவர்கள், இப்படியான இழிநிலை அரசியலில் ஈடுபடுவது இயல்பு. இதனைத் திருத்திக்கொண்டு, மக்கள் பக்கம் வரவேண்டும் என்றே நான் வலியுறுத்தியுள்ளேன்.

ஒன்றும், ஒன்றும் மூன்று எனக் கூற முற்படுபவர்களுக்கு நடுநிலைகூட ஆதரவாகத் தெரியலாம். அது பற்றி எவரும் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை – என்றுள்ளது.

## ஐ.தே.க. ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸுடன் இணைந்து அரசியல் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார் என்று வெளியாகும் தகவல்களை இன்று அவர் நிராகரித்தார்.

மக்கள் பக்கம் நின்று, மக்களுக்கான அரசியலையே, மனச்சாட்சியின் பிரகாரம் இதுவரை நான் முன்னெடுத்து வந்தேன். இனியும் அதே வழியில்தான் என் பயணம் தொடரும் – என்றும் வேலுகுமார் எம்.பி. கூறினார்.

2023 ஆம் நிதியாண்டுக்கான வரவு– செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் நேற்று (08) நடைபெற்றது. இதன்போது வேலுகுமார் எம்.பி. நடுநிலை வகித்தார்.

தன்னிச்சையான முடிவுகளை எடுத்து , தடம்மாறி பயணிக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணி மக்கள் வழிக்க வர வேண்டும் என்பதற்காகவே தான் இவ் வாறானதொரு நிலைப்பாட்டை எடுத்தார் என்று வேலுகுமார் எம்.பி. விளக்கமளித்தார்.

எனினும், வேலுகுமாரின் நிலைப்பாடு தொடர்பில் சமூக ஊடகங்களில் பல கோணங்களில் கருத்துக்கள் உலாவின. ஐக்கிய தேசியக் கட்சி பக்கம் செல்லப் போகின்றார் எனவும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுடன் இணையவுள்ளார் எனவும், இதற்கான பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன எனவும் கூறப்பட்டது.

இந்நிலையிலேயே, அந்தத் தகவல்களை வேலுகுமார் எம்.பி. இன்று மறுத்தார்.

அத்துடன், நடுநிலை தொடர்பான தனது நிலைப்பாட்டை திரிபுபடுத்தி, ராஜபக்ச ஆதரவு, ரணில் ஆதரவு, அரசுக்கான ஆதரவு என முத்திரை குத்தி, வதந்திகளைப் பரப்பி, அரசியல் சேறுபூசும் பிரசாரத்தில் சிலர் ஈடுபட்டுள்ளனர் எனவும், தங்கள் தவறை மூடி மறைப்பதற்காக இப்படியான அநாகரிக அரசியலைச் சிலர் முன்னெடுக்கின்றனர் எனவும் வேலுகுமார் எம்.பி. சுட்டிக்காட்டினார்.

## மின் கட்டண. ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடுகள் ஆணைக்குழுவை நீக்குவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

–இவ்வாறு மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறைகளுக்கெனதனியானநிறுவனங்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் இவ்வாறான முறையே நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்றும் மின்சாரம் மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர மேலும் கூறியுள்ளார்.

## வடக்கில் புயலின். ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுப் பகலும் இரவும் வீசிய புயல் காற்றாலேயே 254 வீடுகள் சேதமடைந்துள்ளன. அத்துடன் பயன்தரு மரங்கள் பல முறிந்து வீழ்ந்து அழிவடைந்துள்ளன. அதேவேளை, கடும் குளிருடன் மழை பெய்ததால் 136 மாடுகளும், 15 ஆடுகளும் உயிரிழந்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்திலே அதிக வீடுகள் சேதமடைந்துள்ளன. அம்மாவட்டத்தில் 141 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்த அதேநேரம் 22 கால்நடைகள் உயிரிழந்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிக கால்நடைகள் உயிரிழந்துள்ளன. இங்கு 129 கால்நடைகள் உயிரிழந்த அதே நேரம் 36 வீடுகள் சேதமடைந்துள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 31 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் மாவட்டத்தின் பெரும் வாழ்வாதாரமான வாழைச்செய்கை அதிகளவில் அழிவடைந்துள்ளது. வாழைத் தோட்டங்கள் நிறைந்த நீர்வேலி, கந்தன், நவக்கிரி மற்றும் கோப்பாய் ஆகிய பகுதிகளில் வாழை மரங்கள் குலையுடன் முறிந்து வீழ்ந்துள்ளன. இதனால் தங்கள் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்று வாழைத்தோட்ட உரிமையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அதேநேரம் வவுனியா மாவட்டத்தில் 34 வீடுகளும், மன்னார் மாவட்டத்தில் 12 வீடுகளும் சேதமடைந்துள்ளன.



# நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## காற்று மாசு ஒரு பிணி

கடந்த சில நாள்களாக மாசடைந்த வழி குறித்துச் செய்திகள் வெளியாகி வருகின்றன.

காற்றின் தரம், அதிலுள்ள திரவ மற்றும் திடத் துகள்களின் கூட்டுத்தொகை அளவீட்டில் கணக் கிடப்படுகின்றது. இதில் ஒசோன், நைட்ரஜன்டை ஒக்சைட், கந்தகஒக்சைட், காா்பன்மொனோக்சைட், கரிமச் சேர்மங்கள், உலோகங்கள் மற்றும் மண் துகள்கள், தூசிகள் போன்றவை அடங்கும்.

காற்றில் இவற்றின் அதிகரிப்பு நமது உடலுக்குக் கேடு விளைவிக்கும் என்பதை சாதாரண பாமர னும் அறிந்து, உணர்ந்து கொள்ள முடியும்.

இலங்கையில் யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, வவுனியா, புத்தளம் போன்ற மாவட்டங்கள் இதனால் அதிகம் பாதிக்கப்பட்டு இருக்கின்றன.

ஆனால், இது உள்நாட்டில் விளைந்த பிரச்சினை அல்ல. இந்தக் காற்று மாசுக்கு உள்நாட்டு விவ காரங்கள் பிரதான காரணிகள் அல்ல.

கொவிட் தொற்றுப் போல இதுவும் நாடு கடந்து வந்தது நம்மைப் பீடித்து, ஆகர்ஷித்து நிற்கும் தொல்லை.

இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து வீசும் வடக்கு கிழக்கு பருவ காற்றினால் விளையும் சிக்கல் இது என்று சுற்றுச்சூழல் அமைச்சின் செயலாளர் டாக்டர் அனில் ஜெயசிங்க கூறு கின்றார்.

“இது உள்நாட்டுப் பிரச்சினை அல்ல, இலங்கை தனித்துக் கையாளுவதற்கு. இந்தியா மற்றும் பிற அண்டை நாடுகளில் உருவாகும் காற்று மாசு பாடுகள் நமது சுற்றுச்சூழலைப் பாதித்துள்ளன. இந்த நிலை பொதுவாக வடக்கு, கிழக்குப் பருவ மழை தொடங்கும் போது ஏற்படுகின்றது. பருவக் காற்று இந்தியா மற்றும் பிற நாடுகளில் இருந்து காற்று மாசுபாடுகளைக் கொண்டு வருகின்றது. இதனால் சில பகுதிகளில் தூசு, துகள்கள் அதி கரிக்கின்றன” – என்கிறார் அவர்.

‘எல்லை கடந்த பயங்கரவாதம்’ போன்று இது ‘எல்லைகள் மீறிய விபரீதம்’. இந்நிலைமையை மாற்றி அமைக்கும் திறன் நம் கையில் இல்லை.

ஆனால் இந்த வினை ஏற்படுத்தக் கூடிய விளை வுகளை எதிர்கொண்டு, சமாளிப்பதற்கான முன்னெச்சரிக்கை – முன்னாயத்த – நடவடிக் கைகளைக் கையாள்வதன் மூலம் பாதிப்புகளை நாம் சமாளித்துக் குறைத்துக் கொள்ளலாம்.

எனவே கர்ப்பிணிகள், முதியவர்கள், சுவாச மற்றும் நுரையீரல், இதய நோய் உள்ளவர்கள், ஒவ்வாமை நோயாளிகள் போன்ற உணர் திறன் எதிர்வினை கொண்ட குழுக்கள் பாதுகாப்பான முன்னேற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும்.

நம்மை வாட்டும் வியாதி இரண்டு வகை என்பவர். ஒன்று – நோய்; மற்றது – பிணி.

நோய் மருத்துவத்தால் மாற்ற, ஆற்றக் கூடியது. பிணி நம்மில் பிணித்திருப்பது. பீடித்து நிற்பது. ஆற்ற, மாற்ற முடியாதது.

காற்று மாசுபாடும் நம் மீது வலிந்து சுமத்தப்பட்ட ஒரு பிணிதான்.

# நாட்டின் காற்று மாசு நிலைமை கட்டுப்படுத்தக்கூடிய ஒன்றல்ல!

## வைத்தியர் அனில் ஜாசிங்க கருத்து



பல்வேறு பகுதிகளில் தற்போது நிலவும் காற்று மாசு நிலை காரணமாக சுகாதாரப் பாதுகாப்பிற்காக முகக்கவசத்தை அணியு மாறு வைத்தியர் அனில் ஜாசிங்க கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பில் வைத்தியர் தெரிவிக் கையில்–

இயலுமானவரை வீட்டிலேயே பாதுகாப்பாக இருங்கள் இந்தியாவில் இருந்து வரும் காற்றால் , கொழும்பு, யாழ்ப்பாணம், இரத்தி னபுரி, புத்தளம், கண்டி, வவுனியா போன்ற முக்கிய நகரங்களில் இந்த மோசமான காற்று மாசு நிலை பதிவாகியுள்ளது.

இந்த நிலைமையை இலங்கையில் கட்டுப்படுத்தக்கூடிய ஒன்றல்ல. குறிப்பாக முதி யவர்கள், குழந்தைகள், இதய நோயாளிகள் மற்றும் நுரையீரல் நோயாளிகள் வீட்டை விட்டு வெளியே வருவதை முடிந்தவரை கட்டுப்படுத்தி னால் நல்லது. மேலும் முகக்கவசத்தை அணிவது முக்கியம். - எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பொருளாதாரப் பாதிப்புக்கு தீர்வு காண தேசிய கொள்கை வகுக்கப்படவேண்டும்!

## சித்தார்த்தன் எம்.பி. வலியுறுத்து



பொருளாதாரப் பாதிப்புக்குத் தீர்வு காண வேண்டுமாயின் நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்த வகையில் தேசிய கொள்கை வகுக்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசி யக் கொள்கைகள் அமைச்சு, முதலீட்டு மேம் பாடு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு–

நாடு பொருளாதார ரீதியில் மோசமாக பாதிக்கப்பட்ட பின்னணியில் நாடாளுமன்றத் தின் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்ட போது, பொருளாதார நெருக்கடிக்கு ஓரளவு தீர்வு எட்டப்பட்டு, வரிசை யுகம் கட்டம் கட்டமாக முடிவுக்கு கொண்டு வரப்படும் என மக்கள் எதிர்பார்த்தார்கள். மக் களின் எதிர்பார்ப்பு நிறைவேறியுள்ளது.

நடைமுறையில் உள்ள பிரச்சினைகளுக் குத் தீர்வு காண பிரதமர் உட்பட அமைச்சரவை ஒத்துழைப்புடன் செயற்படுகின்றமை அவசி யம் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

நிலையான பொருளாதார மீட்சிக்கான திட்டங்கள் முறையாக செயற்படுத்தப்பட வில்லை. நாட்டில் பணவீக்கம் தற்போது குறை வடைந்துள்ளது, இருப்பினும் அத்தியாவசியப் பொருள்களின் விலை சடுதியாக உயர்வடைந்துள் ளது.

பூகோள ரீதியான காரணிகள் தற்போதைய பொருளாதார பாதிப்புக்கு ஒரு காரணம் என்று குறிப்பிடுவதை மறுக்க முடியாது.

தேசிய கொள்கை வகுத்தலில் வடக்கு மற் றும் கிழக்கு மாகாண மக்களின் பங்களிப்பு கிடையாது. தேசிய கொள்கை வகுப்பில் தெற்கு அரசியல் கட்சிகள் முன்னிலையில் இருந்து செயற்படுகின்றன. வடக்கு மற்றும் கிழக்கு மக் கள் பிரதிநிதிகளின் ஆலோசனைகள் கோரப்படுவதில்லை.

வடக்கு மாகாணத்தில் ஒருகாலத்தில் மீன்பிடி மற்றும் உற்பத்தி கைத்தொழில் முன்னேற்றமடைந்திருந்தது. மொத்த மீன்பிடியில் மூன்றில் இரண்டு பங்கு நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

இந்த முன்னேற்றம் யுத்தத்தால் பாதிக் கப்பட்டது. இருப்பினும் யுத்தம் முடிவடைந்ததன் பின்னரும் இந்தத் துறைகள் மீள கட்டியெழுப் பப்படவில்லை. நாட்டின் உற்பத்தி துறைகள் முறையாக மறுசீரமைத்தால் பொருளாதார ரீதியில் நாடு முன்னேற்றமடையும்.

பொருளாதாரப் பாதிப்புக்குத் தீர்வு காண வேண்டுமாயின் நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்த வகையில் தேசிய கொள்கை வகுக்கப்பட வேண்டும்.ஃ –என்றார்.

# இலங்கையில் குற்றச் சுட்டெண் 4.64 சத வீதமாக அதிகரித்தது!

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் நிகழும் நாடுகளில் இலங்கை 6 ஆவது நாடாக இருப்பதாக தெரியவந்துள்ளது.

தென்கிழக்கு ஆசியாவில் சர்வதேச பொலிஸாருடன் தொடர்புடைய என்.ஏ.ஆர்.சி. வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கையில் குற்றச் சுட்டெண் 4.64 சத வீதமாக அதிகரித்துள்ளது.

மேலும் இலங்கையில் 30 பாதாள உலகக் குழுக்கள் உள்ளன எனவும் குறிபிடப்பட்டுள்ளது.

# நீர்கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

வரவு – செலவுத் திட்டத்துக்கு எதிராகவும், அரச அடக்குமுறைக்கு எதிராகவும், சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வழங்கும் நிபந்த னைகளுக்கு எதிராகவும், அரசு தனியார் ஊழி யர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறும் வலியுறுத்தி நேற்று (வியாழக்கிழமை) மாலை 3 மணி முதல் நீர்கொழும்பு தெல்வத்தை சந்தியில் பல்வேறு தொழிற்சங்கங்கள் ஒன்றி ணைந்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தின.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுலோக அட்டைகளை ஏந்தியிருந்தமையோடு எதிர்ப்பு கோஷங்களையும் எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அரச ஊழியர்கள், ஆசிரியர் தொழிற்சங்கங்களை சேர்ந்தவர்கள், தனியார் துறை ஊழியர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



# பயங்கரவாதத் தாக்குதலில் 12பேர் பர்கினோபாசோ நாட்டில் மரணம்!



ஒவ்கடங்கு, டிச.09

ஆப்பிரிக்கக் கண்டத்தில் அமைந்துள்ள பர்கினோபாசோ நாட்டில் கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் போகோஹறம், ஐ.எஸ்., அல் கொய்தா போன்ற பயங்கரவாத அமைப்புகளின் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இந்தப் பயங்கரவாதக் குழுக்களை ஒழிக்க இராணுவமும் பொலிஸாரும் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் பயங்கரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே அவ்வப்போது மோதல் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றமையுடன் இதில் அப்பாவி பொதுமக்களும் பலியாகி வருகின்றனர்.

இந்நிலையில், நேற்றையதினம் பர்கினோ பாசோவின் வடக்கே உள்ள போலா பகுதியில் துப்பாக்கி ஏந்திய நபர்கள் சிலர் வந்து கண் இமைக்கும் நேரத்தில் காட்டுமிராண்டித்தனமாக அங்கு துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இதில் அங்கிருந்த அனைவரும் அலறியவாறு ஓட்டம் பிடித்துள்ளனர். இந்தத் தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டனர் எனத்தகவல்கள் வெளியாகியுள்ளன. விசாரணையில், இராணுவத்துக்கு ஆதரவாக செயல்பட்டு வரும் பொதுமக்களைக் குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டது தெரிய வந்தது. இதையடுத்து, அங்கு பாது காப்புப் படையினர் குவிக்கப்பட்டு விசாரணை நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பதவியிலிருந்து கவிழ்க்கப்பட்டார் பெரு ஜனாதிபது புதிய அதிபராக துணை அதிபர் டினா பொலுவார்டே!



லிமா, டிச.09

தென்னமெரிக்க நாடான பெருவின் அதிபராக இருந்த பெட்ரோ காஸ்டிலோ மீது சமீப காலமாக ஊழல் குற்றச்சாட்டுகள் வலுத்து வந்தன. ஆனால் அவை தன்னை பதவியில் இருந்து நீக்குவதற் கான சதித்திட்டத்தின் ஒரு பகுதி என கூறி அவர் நிராகரித்தார். இந்நிலையில், நேற்றுமுன்தினம் அதிரடியாக அதிபர் பெட்ரோ காஸ்டிலோ, அந்த நாட்டின் தொலைக்காட்சியில் தோன்றிப் பேசினார். நாட்டில் அவர் அவசர நிலையை அமுல்படுத்துவதாக அறிவித்தார். நாடாளுமன்றம்

கலைக்கப்படும் எனவும் தெரிவித்தார். அதுமட்டுமின்றி, நாட்டு மக்களின்

கோரிக்கைகளுக்கு பதில் அளிக்கிற வகையில் அங்கு சட்டம் மற்றும் ஜனநாயகத்தின் ஆட்சியை மீண்டும் ஏற்டுத்தும் நோக்கத்தில் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த அரசை ஏற்படுத்தப்போவதாகவும் அறிவித்தார்.

இது, அங்கு பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. இந்த முடிவை எதிர்த்து மந்திரிகள் பலரும் பதவியை ராஜினாமா செய்தனர். அந்த நாட்டின் அரசியல் சாசன நீதிமன்று, அவர் ஆட்சிக்கவிழ்ப்பைத் தொடங்கி உள்ளார் எனக் குற்றம் சாட்டியது. அவர் தனது முடிவைத் திரும்பப்பெற வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியது. அதி பரின் முடிவை எம்.பி.க்கள் நிராகரித்தனர். ஆனால் எதிர்க்கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள அந்த நாட்டின் நாடாளுமன்றம்

அவசரமாகக்கூடி அவருக்கு எதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணை நடவடிக்கை எடுத்தது.

இந்நிலையில், அவரது பதவியைப் பறிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் தீர்மானத்துக்கு ஆதரவாக 101 வாக்குகள் விழுந்தன. எதிராக 6 வாக்குகள் கிடைத்தன. 10 பேர் வாக்கெடுப்பை புறக்கணித்தனர். குற்ற விசாரணைப் பிரேரணை நடவடிக்கைக்கு ஆதரவாக பெரும்பான்மையான எம்.பி.க்கள் வாக்களித்தமை யால் அதிபர் பதவி இழந்தார். அடுத்த சில நிமிடங்களில் அவர் கைது செய்யப்பட்டார். அவர் கிளர்ச்சியில் ஈடுபட்டார் எனவும் குற்றச்சாட்டுஎழுந்துள்ளது.

மேலும், பதவி பறிக்கப்பட்டதைத் தொடர்ந்து துணை அதிபராக இருந்து வந்த பெண்மணியான டினா பொலுவார்டே அதிபர் பதவி ஏற்றார். 60 வயதான இவர் சட்டத்தரணி ஆவார். அவர் 2026 ஆம் ஆண்டுவரை அதிபர் பதவி வகிக்கப்போவதாக தெரிவித்துள்ளார். அப்போதுதான் முந்தைய அதிபர் பெட்ரோ காஸ்டிலோ பதவிக்காலம் முடிய இருந்தது. பதவி ஏற்ற பின்னர் அதிபர் டினா பேசும்போது, நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிக்க அரசியல் மோதல் நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்தமையுடன், அப்போது அவர், நான் கேட்பது ஓர் இடம். நாட்டை மீட்பதற்கான நேரம் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

## மேலும் 275 மில்லியன் டொலர் பெறுமதிக்கு உக்ரைனுக்கு அமெரிக்கா இராணுவ உதவி!




வொஷிங்டன், டிச.09

உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா கடந்த பெப்ரவரி மாதம் தொடங்கிய போர் 8 மாதங்களைக் கடந்து தொடர்ந்து நீடித்து வருகிறது. இந்தப் போரில் உக்ரைனின் பல்வேறு நகரங்கள் சின்னபின்னம ாகியுள்ளமையுடன், பல நகரங்களை ரஷ்யா தன்வசப்படுத்தியுள்ளது.

ஆனாலும் உக்ரைன் இராணுவம் துணிச்சலுடன் தொடர்ந்து ரஷ்யப் படைகளை எதிர்த்து சண்டையிட்டு வருகின்றது.

உக்ரைனுக்கு உதவியாக அமெரிக்கா மற்றும் பல மேற்கத்திய நாடுகள் இராணுவ மற்றும் பொருளாதார ரீதியான உதவிகளை செய்து வருகின்றன. அந்த வகையில், போர் தொடங்கியதில் இருந்து இதுவரை உக்ரைனுக்கு அமெரிக்கா பல ஆயிரம் கோடி டொலர் மதிப்பிலான இராணுவ உதவிகளை வழங்கியுள்ளது.

அதன் தொடர்ச்சியாக தற்போது உக்ரைனுக்கு மேலும் 275 மில்லியன் டொலர் இராணுவ ஆயுத உதவியை அமெரிக்கா அனுப்பியுள்ளது. றொக்கெட் ஏவுகணைகள் உள்ளிட்ட பல ஆயுதங்கள் இராணுவ ஆயுத உதவியின் கீழ் உக்ரைனுக்கு வழங்கப் படுகின்றன். ரஷ்யாவிற்கு எதிரான போரில் உக்ரை னுக்கு உதவியாக இதுவரை 19.3 பில்லியன் டொலர் மதிப்பிலான இராணுவ உதவியை அமெ ரிக்கா வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானில் பொருளாதார நிலை வீழ்ச்சி துறைமுகத்தில் தேங்கியுள்ள பொருள்கள்!

கராச்சி, டிச.09

பாகிஸ்தான் நாட்டில் பொருளாதார நிலைமை மோசமடைந்து உள்ளதாகக் கூறப்படுகின்றது. அந்நாட்டில், சீனா, எகிப்து, தாய்லாந்து மற்றும் பிற நாடுகளில் இருந்து உள்நாட்டுக்கு தேவையான உணவு பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின் றன. எனினும், கடந்த 3 நாள்களாக கராச்சி துறை முகத்தில் வெளிநாட்டு இறக்குமதி பொருள்களான வெங்காயம், இஞ்சி மற்றும் பூண்டு

உள்ளிட்ட பொருள்கள் தேங்கியுள்ளன என் றும் பாகிஸ்தானில் அந்நிய செலாவணி கையிருப் புப் பற்றாக்குறையாக உள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது.

இதனால், கராச்சி துறைமுகத்தின் பல்வேறு முனையங்களில் இறக்குமதி செய்யப்பட்ட காய்கறி உள்ளிட்டவை தேங்கி இருக்கின்றன. இவற்றின் மதிப்பு இந்திய மதிப்பில் ரூபா 44.47 கோடி இருக்கும் என கூறப்படுகிறது. இறக்குமதி பொருழ்ல்களை விற்பனைக்கு கொண்டு வருவதில் ஏற்படும் காலதாமதம் அவற்றின் தினசரி விலை




உயர்வுக்கு வழிவகுக்கும் என்பதுடன், துறைமுக முனைய கட்டணம், இறக் குமதி கட்டணம் மற்றும் கன்டெய்னர் களுக்கான விலை உள்ளிட்டவையும் அதிகரிக்க கூடும் என எச்சரிக்கப் பட்டு உள்ளது.

கடந்த ஏப்ரலில், நம்பிக்கை வாக்கெடுப்பின் வழியே பிரதமர் பதவியில் இருந்து இம்ரான் கான் நீக்கப்பட்டதில் இருந்து அந்நாட்டில் அரசியல் குழப்பம் தொடர்ந்து நீடித்து வருகிறது. தற்போது இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

# தீவிரப் புயலாக இருந்த ‘மாண்டஸ்’ இன்று பகல் வலுவிழந்து புயலானது

## சென்னை உட்பட தமிழகப் பகுதிகளில் இனி மழை குறையும்




சென்னை,டிச.09

சென்னையில் இருந்து 260 கிலோ மீற்றர் தொலைவில் வங்கக்கடலில் இன்று நண்பகல் மாண்டஸ் புயல் நிலைகொண்டுள்ளது. வங்கக்கடலில் கடந்த 5 ஆம் திகதி உருவான குறைந்த காற்ற முத்த தாழ்வு பகுதி, நேற்று முன்தினம் காலை தீவிர காற்றமுத்த தாழ்வு மண்டலமாக நிலைக் கொண்டிருந்தது. பின்னர், மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, நேற்று அதிகாலை புயலாக வலுப்பெற்றது. இந்த புயலுக்கு ‘மாண்டஸ்’ என்று பெயரிடப்பட்டுள்ளது. தொடர்ந்து இந்த மாண்டஸ் புயல் மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, நேற்று இரவுக்கு பிறகு தீவிர புயலாக வலுப்பெற்றது. தீவிர புயலாக வலுப்பெற்ற மாண்டஸ் இன்று அதிகாலை தீவிரமடைந்தது. இதன் காரணமாக சென்னை உள்பட தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் பலத்த காற்றுடன் கனமழை பெய்தது. இந்நிலையில், தீவிர புயலாக நிலைகொண்டிருந்த மாண்டஸ் புயலாக வலுவிழந்தது. புயலாக வலுவிழந்த மாண்டஸ் சென்னையில் இருந்து 260 கிலோ மீட்டர் தொலைவில் வங்கக்கடலில் நிலைகொண்டுள்ளது.

மாண்டஸ் புயல் மணிக்கு 12 கிலோமீட்டர் வேகத்தில் நகர்ந்து வருவதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தீவிர புயலாக இருந்த மாண்டஸ் தற்போது புயலாக வலுக்குறைந்துள் ளதால் சென்னை உள்பட பல்வேறு மாவட்டங்களில் மழையின் அளவு படிப்படியாக குறையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மாண்டஸ் புயல் மாமல்லபுரம் அருகே இன்று நள்ளிரவில் கரையை கடக்கும் என்றும், அப் போது மணிக்கு 85கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# கடல் உள்வாங்கியதால் தூத்துக்குடியில் பரப்பு!



‘மாண்டஸ்’ புயல் காரணமாக தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 2 நாள்களாக மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. 3 ஆவது நாளாக இன்றும் மீனவர்கள் கடலுக்கு செல்லாததால் படகுகள் அனைத்தும் துறைமுகத்திலும், கடற்கரை பகுதியிலும் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் தூத்துக்குடியில் இன்று அதிகாலை முதலே கடல் சீற்றமாக காணப்பட்டது. சுமார் 3 அடி உயரத்துக்கு அலைகள் சீறி எழுந்தன.

இந்நிலையில் தூத்துக்குடி கடற்கரை சாலையில் ரோச் பூங்கா பகுதியில் திடீரென கடல் உள்வாங்கி காணப்பட்டது.

சுமார் 30 அடி நீளத்திற்கு கடல் உள்வாங்கியதால் கடலுக்கு அடியில் இருந்த பாறைகள் மற்றும் மணல் திட்டுகள் வெளியே தெரிந்தன. இதனால் கடற்கரை பகுதியில் பரபரப்பு நிலவியது.

இதுகுறித்து அப்பகுதியை சேர்ந்தவர்கள் கூறுகையில், இதுபோன்று அவ்வப்போது கடல் உள்வாங்குவது சாதாரணமானது தான் என்றனர்.

# திருமன வீட்டில் காஸ் சிலிண்டர்கள் வெடித்ததில் இரு குழந்தைகள் சாவு!

## 50 பேர் காயம்; ராஜஸ்தானில் சம்பவம்



ஜெய்ப்பூர்,டிச.09

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் நேற்று நடைபெற்ற திருமண நிகழ்ச்சியின் போது இரண்டு காஸ் சிலிண்டர்கள் திடீரென வெடித்து சிதறின. இதில் இரண்டு குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் சுமார் 50 பேர் காயமடைந்தனர்.

ஜோத்பூரில் இருந்து 60 கிமீ தொலைவில் உள்ள புங்ரா கிராமத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. திருமணத்திற்காக உணவு தயார் செய்யும் இடத்தில் வைக்கப்பட்டிருந்த கேஸ் சிலிண்டர்களில் ஏற்பட்ட கசிவால் இந்த பெரும் வெடிவிபத்து நடந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். வெடிவிபத்தின் தாக்கத்தால் வீட்டின் ஒரு பகுதியும் இடிந்து விழுந்தது. 12 பேர் பலத்த தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மாநில முதல் மந்திரி அசோக் கெலாட் இன்று மாலை மருத்துவமனையில் காயமடைந்தவர்களை சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ராமேஸ்வரத்தில் 9 படகுகள் சேதம்

ராமேஸ்வரம்: தமிழகத்தில் வங்கக்கடலில் உருவாகியுள்ள மான்டஸ் புயல் இன்று இரவு கரையை கடக்கிறது. இதன் காரணமாக தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் பலத்த சூறாவளி காற்றுடன் கடல் கொந்தளிப்பாக காணப்படுகிறது. புயல் சின்னம் காரணமாக ராமேஸ்வரம், பாம்பன் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கடந்த 3 நாள்களாக மீன்பிடிக்கக் கடலுக்குச் செல்லவில்லை. இதன் காரணமாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட விசைப்படகுகள், நாட்டப்படகுகள் ராமேஸ்வரம், பாம்பன் துறைமுகங்களில் நிறுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில் புயல் காரணமாக நேற்று மாலை முதல் வழக்கத்தை விட ராமேஸ்வரம், பாம்பன் பகுதிகளில் கடல் கொந்தளிப்பு அதிகமாக இருந்தது. இன்று காலையும் பலத்த சூறாவளி காற்று வீசியது. இதன் தாக்கமாக பாம்பன் கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 4 விசைப்படகுகள், 5 நாட்டுப்படகுகள் ஒன்றோடு ஒன்று மோதி சேதமடைந்தன. இதில் சில படகுகள் கடல் அலையால் இழுத்து வரப்பட்டு கரை தட்டின. இதையடுத்து மீனவர்கள் அதனை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். மேலும் சில இடங்களில் கடல் உள்வாங்கியதாலும் படகுகள் தரை தட்டி தேமடைந்தன. அதனையும் மீட்கும் நடவடிக்கைகளில் மீனவர்கள் ஈடுபட்டனர்.



# உதயநிதி ஸ்டாலினுக்கும் விரைவில் அமைச்சர் பதவி?



சென்னை,டிச.09

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழக அமைச்சரவையை விரைவில் மாற்றி அமைக்க உள்ளார் எனத் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

தலைமைச் செயலகத்தில் அமைச்சர்களுக்கு தரை தளம், முதல் மாடி, 2 ஆவது மாடி, 3 ஆவது மாடிகளில் தனித்தனி அறை ஒதுக் கப்பட்டு, இலாகா வாரியாக அமைச்சர்கள் அந்த அறைகளை பயன்படுத்தி வருகின்ற னர்.

இந்த நிலையில் தி.மு.க. இளைஞரணி செயலாளரும், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், முதல்வர் ஸ்டலினின் மகனுமான உதயநிதி ஸ்டாலினுக்கு அமைச்சர் பதவி விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் தலைமை செயலகத்தில் 10 ஆவது கேட் நுழைவு வாயில் அருகே உள்ள அறை வேக மாக தயாராகி வருகிறது. இதேபோல் 2 ஆவது மாடியிலும் ஓர் அறை முழு வீச்சில் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. எனவே அமைச்சரவை மாற்றி அமைக்கப்படும் போது உதயநிதிக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டால் அவருக்காக இதில் ஓர் அறை ஒதுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மாகாணக் கல்விப் பணிப்பாளருக்குப் கிழக்கில் மணி விழாவும் பாராட்டும்





(பழுவூரான்)

கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகத்தின் சேவையைப் பாராட்டும் முகமாகவும், அறுபதாவது அகவையைச் சிறப்பிக்கும் வகையில் வாழும் போதே வாழ்த்தும் 'நகுலம்' மணி விழாச் சிறப்பு மலர் வெளியீடும் நேற்று மட்டக்களப்பு பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயக் கலைக் கூடத்தில் இடம்பெற்றது.

விழாக் குழுத் தலைவர் அதிபர் துரை சபேசன் தலைமையில் நடை பெற்ற இவ்விழாவில், பிரதம அதிதி யாக கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுச் செயலாளர் மு.கோபாலரெத்தினமும், சிறப்பு அதிதி களாக மட்டக் களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி.சுகுணன், கூட்டுறவு ஆணையாளரும், கிழக்கு மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளருமான பொறியிலாளர் என்.சிவலிங்கம் மற் றும் வலயக் கல்விப் பணிப் பாளர்கள், முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.தில்லை நாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராகக் கடமை யாற்றும் நகுலேஸ்வரி புள்ளநாயகம் மட்டக்களப்புத் தேசத்தில் துறைநீலாவணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மட்டக்களப்பு துறைநீலாவணை மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி கற்று, ஆண்டு ஒன்பது தொடக்கம் க.பொ.த. உயர்தரம் வரை வந்தாறு மூலை மத்திய மகா வித்தியாலயத்தில் கற்று, உயர்தர விஞ்ஞானப் பிரிவில் தேர்ச்சி பெற்றவர். அரச பணியில் விஞ்ஞானப் பாட ஆசிரியராக போட்டிப் பரீட்சை மூலம் தெரிவாகிச் சேவையாற்றியவர். தொடர்ந்து கல்வி நிருவாக சேவையில் நுழைந்து வினைத்திறன் கொண்ட ஆக்கச் செயற்பாட்டினால் உதவிக் கல்விப் பணிப்பாளராக, பிரதி க் கல்விப் பணிப்பாளராக, வலயக் கல்விப் பணிப்பாளராக உயர்வடைந்து, நிகழ்நிலை யில் கிழக்குமாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பரிணாமம் பெற்று விளங்குகிறார்.

அரசின் புதிய சுற்றுநிருபத்துக்கு அமைய இவ்வருட இறுதியில் அவர் சேவையிலிருந்து ஓய்வு பெறுவார்.

## திருமலை மாவட்டத்தில் பாவனைக்கு குழாய்க்கிணறு தொகுதி கையளிப்பு







(ஹஸ்பர)

திருகோணமலை மாவட்டத்தின் தோப்பூர் உப பிரதேச செயலகம், சேருவல சஹன செவன விசேட தேவையுடையோர் நிலையம், தெஹிவத்த மகா வித்தியாலயம் மற்றும் நீலபொல சிவில் பாது காப்பு திணைக்கள முகாம் ஆகியவற்றில் நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தாங்கி வசதிகளுடன் கொண்ட குழாய்க்கிணறு தொகுதி மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வுகளில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம கலந்து சிறப்பித்தமையுடன் இதனைத் திறந்து வைத்தார்.

குழாய்க்கிணறு தொகுதியொன்றை நிர்மாணிக்க மூன்று லட்சம் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது. க்ளோபல் இஹ்சான் ரிலீப் நிறுவனம் இத்திட்டத்தை செயற்படுத்தியதுடன் நிதி உதவியினை Life For Relief and Development நிறுவனம் வழங்கியுள்ளது.

நீர் வசதி இன்மை காரணமாக இம்மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். நீண்ட கால தேவை இதன் மூலம் நிறைவேறியுள்ளது.

இந்நிகழ்வுகளில் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக், சேருவில பிரதேச செயலாளர் பி.ஆர்.ஜயரத்ன, க்ளோபல் இஹ்சான் ரிலீப் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஜி.அர்ச்சனா சலே உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## மருதமுனையில் கடல் சீற்றம் தென்னை மரங்கள் பல சேதம்





(ஏ.எல்.எம். ஷினாஸ்)

வாங்காள விரிகுடா கடலில் ஏற்பட்டுள்ள தாளமுக்கம் மற்றும் வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக கரையோரப் பிரதேசங்களில் கடல் கடும் கொந்தளிப்பாக காணப்படுவதுடன் கடலரிப்பும் பாரிய அளவில் ஏற்பட்டு வருகின்றது.

மருதமுனையில் கடலரிப்பு காரணமாக கரையோர பிரதேசங்களில் வானுயர்ந்து வளர்ந்து நின்றுதென்னைமரங்கள்கடலுக்குள்விழ்ந்துள்ளன. இவ்வாறு தொடர்ந்தும் கடலரிப்பு ஏற்பட்டால் மேலும் பல மரங்கள் கடலுக்குள் விழும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை கரையோர பிரதேசங்களில் தொடர்ந்தும் பலமான காற்று வீசி வருவதுடன் அடை மழையும் பெய்து வருகின்றது. காற்று காரணமாக சில வீடுகளின் கூரைகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதுடன். ஆங்காங்கே மரங்களும் விழுந்துள்ளன.

குளிர் காற்றுடன் கூடிய பனி மூட்டம் வீதிகளை மறைத்த வண்ணம் காணப்படுகின்றது. மீனவர்கள் தமது தோணிகள், வலைகளைஒ பாதுகாப்பான இடங்களுக்கு நகர்ந்துகின்றமையையும் காணக் கூடியதாக உள்ளது.

## முகாமைத்துவ பயிற்சிப் பிரிவின் மண்டபம் நேற்றுத் திறப்புவிழா



(ஹஸ்பர்)

திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி பிரிவின் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மண்டபம் நேற்றுக் காலை கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இங்கு பயிற்சி மையத்தில் தமிழ் மொழி பயின்ற உத்தியோகத்தர்கள் ம ற்றும் பல்வேறு துறைகளில் பயிற்சி பெற்ற குழுவினருக்கு விருதுகள் மற்றும் சான் றிதழ்களை ஆளுநர் இதன் போது வழங் கினார். இதற்கான அனுசரணையை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் வழங்கியி ருந்தது.

இந்த நிகழ்வில், பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க, ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட திட்ட முகாமையாளர் ஜே.ஜீட் வெல்டன், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற் றும் திணைக்களங்களின் தலைவர்கள், முகா மைத்துவ பயிற்சி நிலையத்தின் பணிப்பாளர் எம்.எம். ஹாலிதா உட்படப் பலர் கலந்து கொண் டனர்.

# சட்டவிரோதக் கடலட்டைப் பண்ணைகளை எதிர்த்து கடற்றொழிலாளர்களை காப்போம்!

## சட்டத்தரணி சுகாஷ் உத்தரவாதம்



சட்டவிரோத கடலட்டைப் பண்ணைகளை எதிர்த்து கடற்றொழிலாளர்களைப் பாதுகாப்போம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

கிராஞ்சியில் அமைக்கப்பட்டிருக்கின்ற சட்ட விரோதமான கடலட்டை பண்ணைகளுக்கு எதிராக, ஜனநாயக வழியில் போராடிக் கொண்டிருக்கின்ற அப்பாவி மீனவ குடும்பங்களுக்கு எதிராக, பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்து கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியிருந்தார்கள்.

இந்த வழக்கிற்கு மீனவர்கள் சார்பில் நேற்று (வியாழக்கிழமை) ஆஜராகிய பின்னரே இவ்வாறு தெரிவித்தார். மேலும் இந்த விடயம் தொடர்பில் தெரிவிக்கையில் –

நேற்று (வியாழக்கிழமை) நாங்கள் நீதிமன்றத்திலே, பொலிஸாருடைய வழக்கை எதிர்த்து குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவையின், 81ஆம் பிரிவின் கீழ், பொலிஸார் இந்த வழக்கைத் தாக்கல் செய்ய முடியாது என்றும், இதில் அப்பாவி மீனவர்கள், தங்களுடைய வாழ்வாதாரமும், ஜீவனோபாயமும் பாதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் சட்டவிரோதமாக, எந்தவிதமான அனுமதியும் பெறாது அமைக்கப்பட்டிருக்கின்ற, கடலட்டைப் பண்ணைகள் அகற்றப்பட வேண்டும் என ஜனநாயக ரீதியிலேயே போராடுகிறார்கள் என்றும், ஜனநாயக ரீதியில், முன்னெடுக்கப்படுகின்ற போராட்டங்களை 81 ஆம் பிரிவின் கீழ் வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றத்தில் கொண்டு வர முடியாது என்பதையும் சுட்டிக்காட்டி வாதாடியிருந்தோம். அந்த அடிப்படையில் சந்தேக நபர்களாக முற்படுத் தப்பட்ட மீனவர்களை பிணையில் விடுவித்த நீதிமன்றம் அடுத்த தவணை கடலட்டை பண்ணையாளர்களை, நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு கட்டளையிட்டு இருக்கிறது. இந்த வழக்கில் மஹிந்த மற்றும் சரண்யா ஆகியோரும் ஆஜராகி இருந்தார்கள்.

# வீதிக்குக் குறுக்கே மரம் விழுந்ததால் பலாலி வீதி போக்குவரத்து இடையூறு!



யாழ்ப்பாணத்தில் நேற்று (வியாழக்கிழமை) முதல் சீரற்ற காலநிலை நிலவி வரும் நிலையில், காற்றால் யாழ்ப்பாணம் கந்தர் மடம் பகுதியில் பலாலி வீதிக்கு குறுக்கே வாகைமரம் விழுந்ததில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) வீசிய கடும் காற்று மற்றும் மழை காரணமாக மேற்படி மரம் வீதியில் விழுந்து போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டது.

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட மேற்படி பகுதியில் மரத்தை அகற்றுவதற்கு மாநகர சபையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தூசு படிமங்கள் இன்றுமுதல் குறைவடையும்!



வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தூசுப் படிமங்கள் இன்று (வெள்ளிக்கிழமை) முதல் குறைவடையும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மெண்டௌஸ் சூறாவளியினால் இந்தியாவில் இருந்து தூசுத் துணிக்கைகள் அதிகளவில் நாட்டில் சூழ்ந்துள்ள நிலையில், நாடளாவிய ரீதியில், அதிக குளிருடனான வானிலை நிலவுகின்றது.

இந்த நிலையில், நாடளாவிய ரீதியில், 60 சுற்றுப்புறக் காற்று தரக் கண்காணிப்பு நிலையங்களை நிறுவ திட்டமிட்டுள்ளதாக, மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அரச நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளதாக, அதிகார சபைத் தலைவர் சுபுன் எஸ். பத்திரகே தெரிவித்துள்ளார்.

சுமார் ஒரு தசாப்தத்தின் பின்னர் நாட்டின் வளிமண்டலத்தில், அதிகளவான தூசுத் துகள்கள் நேற்றைய தினம் படிந்ததாக மத்திய சுற்றாடல் அதிகாரச் சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் நோக்கில் மன்னாரில் பரிசோதனைகள் நடந்தன!





போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் நோக்கில் வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரைக்கு அமைவாக விசேட பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

நேற்று (வியாழக்கிழமை) மன்னார் மாவட்டத்தில் அதிகாலை தொடக்கம் வீதிகள், பாடசாலைகள்,பொது இடங்களில் மேற்படி பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மோப்ப நாய்களின் உதவியுடன் குறிப்பாக பாடசாலை சூழலில் போதைப்பொருள் பாவனை அறிகுறிகள் காணப்படுகின்றனவா? என்பது தொடர்பிலும் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

மேற்படி பரிசோதனைகள் தொடர்ச்சியாக அனைத்து பாடசாலைகள் மற்றும் அரச அலுவலகங்களில் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அநாவசியமான ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவிர்ப்பது நல்லது என்று வடக்கு மாகாண மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் ரி.சுபோகரன் தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில நாட்களாக வடக்கு உட்பட இலங்கையின் சில பகுதிகளில் வளியில் தரச் சுட்டெண் சற்று உயர்வாகக் காணப்படுகின்ற அறிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. இது சாதாரணமாக வளி மண்டலத்தில் ஏற்படுகின்ற காலநிலை மாற்றத்தின் மூலம் அதாவது காற்றின் வேகம் காற்றின் திசை மற்றும் தாழமுக்க மாற்றத்தின் காரணமாக வளியில் காணப்படும் சில மாசுக்கள் இலங்கையிலே செறிவடையக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

அந்தவகையிலேயே கடந்த சில நாட்களாக, வளித்தட சுட்டெண் இலங்கையில் காணப்படுகின்ற நிறுவனங்களின் அறிக்கையின்படி சற்று அதிகரித்துக் காணப்படுகின்றது.

இவ்வாறு காணப்படுவதால், மக்கள் பொதுவாக அவதானமாக நடமாடுவது நல்லது. அதாவது அநாவசியமாக வெளியில் நடமாடாது, உரிய பாதுகாப்புடன் நடமாடுவது விரும்பத்தக்கது. வெளியில் அநாசியமாக நடமாடுவதைக் குறைத்துக்கொள்வது மிக நல்லது.

அதேநேரம் நேற்று தொடக்கம் மழையுடனான காலநிலை காணப்படுவதால், இந்த வளித்தட சுட்டெண் ஆனது கிடைக்கப்பெற்ற அறிகையின்படி குறைந்து சென்று சாதகமான நிலைக்குச் செல்வதை க் காணக்கூடியதாக உள்ளது. வேகமாகக் குறைவடைந்து சாதாரண ஒரு மட்டத்தை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தொடர்பில் மக்கள் பெரிதாக அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. பயப்படவும் தேவையில்லை. ஆனால், நோயாளிகள், வயதில் மூத்தவர்கள், சிறுவர்கள் அவதானமாக நடமாடி, அநாவசியமாக வெளியில் செல்வதைத் தவித்துக் கொள்வது நல்லது.

இது அநேகமாக இன்னும் ஓரிரு தினங்களில் ஒரு சாதாரண நிலையை அடையக்கூடிய வாய்ப்புகள் மிகவும் சாத்தியமாகக் காணப்படுகின்றது – என்றார்.




விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.12.2022 இல் வெளியிடப்பெற்றது.